



ஓலை 124| ஓசை 247| ஜூன் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## 'ஆய்வியல் அறிஞர்' பேரா.அ.ச.ஞானசம்பந்தன்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்

## பொருள்

எல்லா உயிர்களிடத்திலும் இரக்கம் கொண்டு வாழ்பவரே அறவோர். அவரே அந்தணர்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன்**
**குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**


அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


## அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## தந்தை சொல்மிக்க மந்திர மில்லை!

பாவகை : குறளடி வஞ்சிப்பா







மின்னல்யிடி இடித்தும்மழைத்
துன்பத்துயர் மறந்தேமுகில்
கொட்டும்மனங் கொண்டேயெனை
விட்டேயுனை உயர்த்தல்தனை
எண்ணும்நலம் உரைத்தாலுயர்
கண்ணேமறுத் தேதான்ஒதுக்
காமல்தலை மேலேயதை
ஆமாம்என நடந்தால்இழி
வேதும்உனை சேராதென
ஓதும்கலை இதுவேயென
ஏற்றேநட! சூழாதுயர்
என்றே
தந்தை என்றன் சொல்லே உன்னை
விந்தையாய் உயர்த்தும் ஏற்றால்;
இந்த உலகில் இனிதாய் ஏற்றுமே!

நெல்லின்பயிர் இதுவேயென
புல்லாம்களை தன்னைக்கதை
யளப்பர்யென மகனேயறி;
உளத்தைக்கனி வாக்கல்இனி
வளத்தைப்பெரும் வாழ்வில்இணை;
அதற்கோநிதம் ஆற்றல்தனை
உதவும்மனம் பெற்றேபலர்
உயர்ந்தேசெல முதலில்உனை
உயர்த்திக்கொள முனைவாய்பிழை
இல்லாஉயர் பண்பில்திளை;
பொல்லார்நிறை வையம்இது
எல்லாம்அறி இன்னல்உடை
அல்லல்துயர் அகலும்உழை;
என்றுமே
நல்வினை நோக்கி நாளுமே வாழ்வாய்;
அல்லவை தன்னைக் கனவிலும்
இல்லா தொழிக்க எந்தைசொல் கேளே!

**இலக்கணக் குறிப்பு:**

இரு சீரடியால் வருவது குறளடி வஞ்சிப்பா. மூன்றடி முதல் பல அடிகள் வரும். பெரும்பான்மையாக தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி ஆகிய சீர்களே வரும் அருகி நான்கசைச் சீர்களும் வரும், வஞ்சியடிகளுக்கடுத்துத் தனிச்சொல் வரும். ஆசிரிய சுரிதகத்தால் ஏகாரத்தில் முடியும்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

# கோடை மழை

பாவகை : கலிவிருத்தம்
தேமா + புளிமா + கருவிளம் + தேமா

வாட்டம் அகற்ற வளியுமே சூழ
ஆட்டக் கிளையில் அசையுமே பூக்கள்
காட்சி தருமே கருநிற மேகம்
நாட்டும் மழையால் நனைந்ததே மண்ணும்.

********

கோடை மழையால் கொளுத்திய வெயில்
வாடை வளியால் வலியவே நீங்க
சோடை நிறைய சொரிந்ததே நீரை
ஈடை நிறைத்தே எடுத்ததே
ஓட்டம்.



கவிஞர் செ. கலைவாணி

# கல்லாமை

### பா வகை: தரவிணைக் கொச்சகக் கலிப்பா

விலங்கில் இருந்து வேறுபடா வாழ்வை
கலங்கிப் கழிப்பாய்
கல்லாமை அரக்கனொடு
நிலத்திலே நின்றிடுவாய் நீங்காப் பழியுடனே

ஆகவே,
கற்றிட வாழ்வும் கனியெனவே இனிக்கும்
பெற்றிடு செல்வமாய் பேறாகக் கல்வியையே
வற்றிடா தென்றும் வளமுடன் வாழ்வாய்

எனவே,
பொல்லா நிலையுமே போக்கிட
எல்லா நிலையிலும்
ஏணியாம் கல்வியே



கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# என் கடன்

தாத்தா பயன்படுத்தியது
எல்லாமே இன்று
அப்பாவின் வசமாகிவிட்டது.
எல்லோரையும்
சுழற்றி அமரவைக்கிறது
காலச்சக்கரம்.

படுக்கையறையிலிருந்து
பக்குவமாய்
வராண்டாவில்
பாய்விரித்துக் கொள்கிறது
வயோதிகம்.
அதற்குத் தக இசைகிறது
முதுமை மனசும்.

நிறைவுற்ற பணியால்
எதிலும் நாட்டமில்லை.
அதனால்
பெரிய நட்டமுல்லை.
என் தாத்தா
கோடிட்ட இடத்தை
தாத்தாவான என் அப்பா
நிரப்பிக்கொண்டிருக்கிறார்.

என் அப்பா
எனக்கிட்ட வெற்றிடங்களை
நான் நிரப்பியாக வேண்டும்.
வராண்டாவிற்கு வரும்
வாய்ப்பு
கிடைக்கப் பெறும் வரை
நான் காத்திருக்கப் போவதில்லை.

என் கடன்
பணிசெய்து கிடப்பதே...!



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# விமலனிடத்திலோர் விண்ணப்பம்

விடையொன்று தாவென்று நாளெல்லாம்
விடையேறி உனைநான் வேண்டிவந்தேன்;
கடையன் நானென்றாலும் கண்ணுதற்
கடவுளேநீ யெனக்கம்மை யப்பன்தானே!
உன்பிள்ளை என்னைநீ ஏளனமாய்
என்றும் பார்ப்பது ஏனோ?

தன்பிள்ளை என்றென்னை நீஎண்ணாதது
அன்பில்லையுனக் குவுயிர்களிடத்து எனவாகாதோ?
இடபவாகனமாய் நானில்லையே உனைசுமக்வென
படபடக்குது எந்நாளுமெந்தன் நெஞ்சம்;
கடக்குமிடமெல்லாம் கடவுளேயுந்தன் சிந்தையோடு
நடந்துகடந்திட விரும்புதெந்தன் நெஞ்சமாயினும்
மடமனது பலநேரமுந்தன் சிந்தை விட்டு
சடத்தோடுதொடர் புகொண்டுசக தியலுழல்கிறதே!



சண்டிகேஸ்வரர் போல நானுமில்லையேயுன்
சன்னதியில் வீற்றிருக்கும் வாய்ப்புமில்லையே!
சங்கடங்கள் வரும்போது சாஷ்டாங்கமாய்
சங்கராவுன் முன்விழுந்தே கிடக்கிறேன்;
சடுகுடுவென நீவந்து உச்சி முகர்ந்து
சங்கடங்கள் தீரவோர்வழி சொல்லவில்லையே!

எனைஈன்றோர் கொண்ட இச்சையினால்
எளியோனுமிங்கு மனிதனாய்ப் பிறந்து விட்டேன்;
நானுமிங்கு இச்சை கொண்டு
நாட்டினர்போல வொருபிள்ளையும் பெற்றுவிட்டேன்;
பிறந்தபிள்ளை பெற்றவரை நேசிக்கவில்லை;
பெற்றதனாலப் பிள்ளையைத்துறக் கமுடியலையே!

செய்த பாவந்தான் என்னவென்று
செய்தவனுக்குத் தெரிய வில்லை;
செய்த செயலின் கூலியைச்
செய்தவர்க்குத் தந்திடும் அறவோனே
பாவத்தை அனுபவிக்கயான் தயாரென்றாலும்
பரமனேயான்செய் தபாவமிதுவெனவே யுரைத்திடு!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# என்னைக் கவர்ந்த பேரிளம் பெண்ணே

எதுகைக்கும்மோனைக்கும்
இலக்கியம் எழுதும் பேரிகையே.
எங்கும்
வியாபிக்கும் இலக்கணம்
படைத்தவளே.

மஞ்சு கவிழும் மலை முகடுகள்
ஏந்திய கைபர்
கணவாயே.

சித்திரமாய்
வடிவெடுத்த
ஓவியத்தின்
காவியமே.

பார்க்கும்போதே
இமைக்காமல் விழி வாங்கும்
வானவில்லே.

சுவைப்பதற்கே முக்கனி
சேர்க்கும்
தேவலோக
இரவி வர்மனின்
கைவண்ணமோ.

கவிழ்த்து விட்டு
எழமுடியாமற் செய்யும்
கெண்டை மீன்விழிகளின் சொந்தமே.

இளமையை விலை பேசும்
இன்பத்தின்
அமுத சுரபியே.

என்னைக் கவர்ந்த
சூறாவழியே!
எனக்குள்
எப்போது உதயமாகப்
போகிறாய்
அசைந்தாடும் ஆதவனாய்.

என்னைக் கவர்ந்த பேரிளம் பெண்ணே!



கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# தமிழ்ப்பிள்ளைகள்

அரம்பர் இழைத்த தீங்கு
அகம் கடிந்து இன்னார் வீழ
இளவெய்னி அழல் தரித்து
அண்டர் செருக்கு வீழ்த்த
செருக்களம் புகுந்தாள்.

இளவேனிற் வெய்யில் உமிழ்
அழற்கதிர் நெருக்கி வீழ;
அகம் இறுக்கிய பௌத்த தடிகள்
இன அரசியல் பசிக்காக
வெந்து விதையாகிப் போன
தமிழ்ப்பிள்ளைகள்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# எழுத்தோவியச் செம்மல்

முத்தமிழ் வித்தகனே எழுத்துலக நாயகனே
உமது எழுதுகோல் இளைஞனை எழுப்பியது
பதினான்கு வயதில் கரங்களில் எடுத்தது
இன்று வரையிலும் தலை நிமிர்ந்தது.

காவியம் படைத்து காலத்தை வென்றவர்
எழுதியதை ஒன்றாய் கோர்த்து மாலையாக்கி
அழகுப் பார்த்து மகிழ்ந்தவர் கலைஞர்
உடன்பிறப்பே எழுதியதில் மெய் சிலிர்த்தது.



தமிழே அமுதே எழுதும் போது
கைகள் இரண்டும் துள்ளி விளையாடியது
கோடி இதயங்களில் வாழ்கிறது எழுதுகோல்
உனது எழுதுகோலுக்கு எதுவும் நிகராகது.

நிழல் கூட பிரிந்துச் செல்லலாம்
உனது ஆறாவது விரல் எழுதுகோல்
என் இதயத்துடிப்பு நிற்கும் வரை
உமது எழுதுகோலில் இரசிகை நான்.

திரவிய தேடலாகவும் திரையுலக மாலுமியாகவும்
நட்சத்திர நாயகனாகவும் உலா வந்தாய்
மை சிந்தினாலும் உதிரமாக வந்து
உயிர்க் கொடுத்தது உனது எழுதுகோல்.

எங்கள் எழுதுகோவில் மை தீர்ந்திடும்
உனது சிந்தனைகள் நாளும் வற்றாத
ஆறாய் பாய்த்து ஒடிக் கொண்டிருக்கும்
வாசகனின் கண்களுக்கு குளிர்ச்சியும் ஊட்டும்.

அனல் பறக்கும் வசனத்தால் பறந்தாய்
பராசக்தி சக்தியாய் விஸ்வரூபம் எடுத்தது
திருக்குறளையும் ஆய்வுச் செய்து வென்றாய்
குமரியில் வள்ளுவனும் வானளவும் உயர்ந்தார்.

தென்றல் தவழ்ந்துச் செல்லும் காற்றிலும்
உனது எழுதுகோல் பேசிவிட்டுச் செல்லும்
சூரியன் உதித்தாலும் மறைந்தாலும் வரும்
உமக்கு ஒய்வு என்பதே இல்லை.

கலைஞன் கலைக்காகவே வாழ்ந்துக் காட்டுகிறான்
கலைஞர் எழுத்துக்காகவே நம்மோடு வாழ்ந்தவர்
அவர் இல்லை எனினும் எழுத்துக்கள்
நம்மோடு எந்நாளும் உறவாடிச் சென்றிடும்.

கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# அவளின் அமைதி

மௌனம் ஓர் ஆயுதம்
காதலிலே
விழிகளின் மொழிகளில்
உணர்வுகளின் சங்கமம்

பேசிடாத வார்த்தைகள்
அன்பின் வெளிப்பாடு
குறிப்பறிந்திட
உள்ளத்தில் உவகை பிறக்கும்

மயங்கிடும் நெஞ்சம்
மங்கையிடம் தஞ்சம்
கனவுகள் நிறைவேறும்
காட்சியும் நனவாகிடுமே

அவளின் அமைதியில்
உண்டாகும் நிம்மதி
களத்தில் காதலும்
கைகோர்த்து நடந்திடும்

விரல்களின் பிணைப்பினிலே
நரம்புகள் நர்த்தனமாடும்
அமைதி நிரந்தரமில்லை
வாழ்வின் இதயத்துடிப்பே

இதழ்கள் விரித்து
இன்சொல்லும் உதிருமே
காத்திருந்த தருணமெல்லாம்
காரிகையிடம் அடைக்கலமே

அரவணைத்து செல்லும்
பந்தத்தில் துள்ளும்
காதலின்பம் தந்திடும்
பாசத்தோடு தழுவிடும்

எண்ணியவை யாவும்
தடங்கலின்றி நிறைவேறும்
பொறுமையாக இருந்திட்டால்
பொக்கிசம் உனதாகுமே



கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

8. விமலையார் இலம்பகம் .

குதிரை மீதேறி சென்றான் சீவகன்
மதித்து நந்தட்டன் கூடவே வந்தான்
பதுமுகன் நண்பனும் சேர்ந்து கொண்டான்
பத்திரமாக இருக்கும் தாயின் நினைவுகள்
( மதித்து : துணிந்து )
கணவனைப் போரில் இழந்தாள் விசயை
துணைவனைப் பறிக்கொடுத்து தப்பினாள்
பிணம் எரிக்கும் சுடுகாட்டில் தஞ்சம்
குணமான பிள்ளை ஈன்றாள் அங்கே

தான் பிறந்த இக்கட்டான சூழல்
தன்னால் தாய்க்கு ஏற்பட்ட துன்பம்
பின்னாளில் பிள்ளையை வளர்க்க இயலாமை
தனித்தே இருக்கிறாள் கனவுகளுடன் தாய்

தாயைக் காணவே இந்தப் பயணம்
தாய் விசயை தவப்பள்ளியில் இருந்தாள்
தாய் இருக்கும் நகரம் தண்டகாரண்யம்
சேய் மற்றவர்களுடன் அங்கு வந்தனர்.

சோலையில் தங்கினர் இரவு நேரம்
அச்சோலையின் மறுபுறம் தவப் பள்ளி
சாலையோரம் மடத்தில் தங்கினர்
காலையில் விசயைக் காண விழைந்தனர்

எல்லிருள் விசயை கனா கண்டாள்.
இல்லை ஏனாது மகன் வருகிறான்
பல்லியும் நல்ல இடத்தே பட்டன
அல்லி மலர்போல் சிரித்து வருவான்
( எல்லிருள் : விடியலில் )
வந்தான் சீவகன் மலரடி தொழுதான்
அந்தநாள் மழலை அழுகுரல் சத்தம்
இந்தநாள் பேரழகன் மகனைக் கண்டாள்
எந்தநாளும் இல்லாத பேரானந்தம் பெற்றாள்

"தாயின்மீது ஆணை காலம் வரும்
பாயும் புலி பதுங்கியது போதும்
தேய்பிறை முடிந்து வளர்பிறை வரும்
சேயின் கடமைகளை உணர்வேன் நான

பழி ஓரிடம் பாவம் ஓரிடம்
இழந்த நாட்டை மீண்டும் பெறுவேன்
பழி தீர்ப்பேன் வஞ்சகனை வெல்வேன்."
சூளுரைத்து விடை பெற்றான் சீவகன



தொடரும்...

கவிஞர் ந. திருக்காமு

# நீயும் நானும்



இரண்டு பெயர்கள் அல்ல,
ஒரே உரிமை.
நாம் சொல்கிற வார்த்தைகள்
தொடர்கதை அல்ல,
தொடர்பின் உறுதி.

வாழ்க்கை இங்கே துவங்கவில்லை,
வாழ்த்து சீட்டுகளோடு அல்ல,
மலர்களோடு அல்ல,
நாம் ஒருவருக்கொருவர் இருப்பதில்தான்
வாழ்க்கை தினம் தினமாக பூக்கிறது.

தலைவனாய் இல்லம் வழிகாட்டினாய்,
தாயெனவும் தோழனாகவும் மாறினாய்,
மௌனத்தில் புரிந்து கொண்டே
முழு உலகமாக என்னை உன்னுள் அடக்கினாய்.

இன்று உலகம் "தம்பதியர்" என்ற
வார்த்தையை ஒலிக்கிறது.
நாம் ஒலி செய்யாத
அன்பினை வாழ்ந்து சொல்கிறோம்.

ஒவ்வொரு நாளும்
ஒருவருக்கொருவராய்

கவிஞர் பானு அப்துல்லா

# போராட்டங்கள்

தினந்தோறும் சாலைகளில்
போராட்டத்தின் சத்தங்கள்

வறுமையும் அரசியலும்
போராட்ட முகங்களாய்

போராடும் கரங்கள்
குரல்களின் சத்தங்களாய்

உரிமைகள் தொலையும்
பொழுது வீதிகளில்

மக்களின் பாதயாத்திரை
போராட்ட சுவடுகளாய்

சுதந்திரத்தின் போராட்டம்
இன்றும் தொடர்கதையாய்




கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# விருட்சத்தைத் தாங்கும் வேர்கள்

வேரினால் மண்ணில் ஆழப் பதிந்தேன்
பாரினில் கிளைகளால் சூழ நிறைந்தேன்
நீரை உறிஞ்சி வழங்கும் வள்ளல்
பேரைச் சொல்லி போட்டதில்லை துள்ளல்
மண்ணில் மறைந்து மறைமுகமாய் இருக்கிறாய்
வண்ணமலர் பூக்கவைத்து அறிமுகம் செய்கிறாய்
காரணங்கள் சொல்பவர் காரியங்கள் செய்வதில்லை
காரியங்கள் செய்பவர்கள் காரணங்கள் சொல்வதில்லை
எத்தனை உயரம் நானே வளர்ந்தாலும்
அத்தனை துயரம் தாங்கியது வேரே



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# மழலை

தாய்மை மடியில் இறைமைதரும்
அன்புக் கொடை குழந்தை
குடும்ப மகிழ்வைக் கூட்டும்
நல்வரவு குழந்தை

பெண்மைக்குத் தாய்மை வழங்கும்
அருள்ஆசி குழந்தை
ஆணுக்குத் தந்தை யெனும் பெயர் சூட்டும்
மந்திரச் சொல் குழந்தை

குழந்தையின் முதல் குரல் அழுகை ;
குடும்பத்திற்கோ ஆனந்தப் புன்னகை
எழுத்து வடிவம் இல்லா
உயிர்மொழி மழலை

பெற்றவள் மட்டுமே
அறியும் மறைமொழி மழலை
அகராதியில் இல்லா
அருள்மொழி மழலை

வெள்ளை மனத்தின்
பிஞ்சுக்குரல் மழலை
அறிவின் ஆதிக்கமிலா
உணர்வு மொழி மழலை

குழந்தையின் குளறல் பேச்சு
மனக்கவலை மாற்றும் மருந்து
குழலாய் யாழாய்
சங்கீத வீணையாய் மழலை;

மலடெனும் இழிபெயர் வெட்டும்
வாள் ஓசையாயும் மழலை
மூளை வளர்ச்சி
முதல் ஆறு வருடத்தில் எண்பது விழுக்காடு ;

எண்ணிப் பார்த்து
பிள்ளைநலம் பேணு ;செழிக்கும் அவர்அறிவு
குழந்தையின் மழலை மனதிற்கு இனிமை - வளர்ந்த
குழந்தையின் மழலை அறிவின் குறை

இறைவன் படைப்பில்
சிறப்புக் குழந்தை என்போரும் உளர் ;
அவர் சிரிப்பில் இறையருள் பிறளும்;
மானுட இதயங்கள் அழும்

தாய் தந்தை கைகள் பற்றி
மழலைகள் நடந்து செல்லும்
மறவாதீர் உங்கள் அரவணைப்புக்குக்
காத்திருக்கின்றன தெய்வீகச் சிறப்புக் குழந்தைகள்



கவிஞர் ஆ சு கந்தன், திருவொற்றியூர்

# பகற்கனவு



விடியற்காலை மழை போல
அமுதம் சொரிந்தாய் என் வாழ்வில்
பசுமை நிழலாய் வந்த உன்னை
பார்க்க நெஞ்சம் பூத்தது மௌனத்தில்.

கண்ணோட்டமே ஒரு கனாக் கிளி
சிறகடித்து சென்றுவிட்டாய் நிஜம் தாண்டி.
பேசாமலே காதல் வளர்ந்தது
பேச ஆரம்பித்த பிறகு சுவர் எழுந்தது.

நாம் எதிர்கொண்ட ஒவ்வொரு தருணமும்
வெண்மையான மெமரியாகவே உதிர்ந்தது.
நான் ரசித்த மௌனம் உன் நினைவாய்
நீ மறந்த பார்வை என் கவிதையாய்.

உன் நடையிலே சங்கீதம் ஒலிக்க
நான் கவனிக்கத் தவறவில்லை ஒருகணமும்
ஆனால் என் பயணம் உன்னை நோக்கி
உன் பாதை வேறொரு பக்கமாய் திரும்பியது.

நீயும் என்னை ஒரு கணம் நேசித்தாயோ?
அல்லது நான் ஒன்றாக மிஞ்சிய கனவோ?
பதில் தேடிப் போன என் மனதுக்குள்
உன் மௌனம் சுகமான காயமாய் முடிகிறது.

பகற்கனவுகள் உணர்வுகள் பேசும் மொழி
நமக்குள் நடந்த அதே மொழி
நேரத்தில் சேர முடியாத நம் இரு இதயங்கள்
நிழலில் மட்டும் கைகோர்த்து நடந்தன.

நீ வாழும் வெண்மீனில் நான் ஒளியாகவோ
நான் விழிக்கும் கனவில் நீ நிழலாகவோ
எப்போதும் எங்கோ அருகில், ஆனால் எட்டாதாய்.
பகற்கனவாய் மட்டுமே நீ... நிஜமாய் இல்லை.

இது சத்தமில்லாத ஒரு காதல் பயணமாய்
யாதுமாய் நீயாய் தொடரும்.

கவிஞர் இ. தேவர்மன், இலங்கை

# பூமி வந்த தேவ தேவதை

சற்று முன் தான் வானவில் வந்து
பூலோகம் எங்கும் தன் தேடுதல்
நடவடிக்கையை மேற்கொண்டு
திரும்பிச் சென்றது
உன்னைக் காணவில்லை என்று.

உன் மூச்சுக்காற்று பட்டால்
அந்த தென்றலும் ஸ்தம்பிதம் அடைந்திடுமாம்.
உன் ஓரப்பார்வை பட்டால்
அந்த கட்பாறையும் உருகி வடிந்திடுமாம்.



உன் முகத்திரையை நீ கலைந்ததால்
பூலோகப் பூக்களெல்லாம்
ஒப்பனை செய்து கொண்டன
உன் அழகுக்கு ஈடு கொடுக்க முடியாமல்.

வான் மேகங்கள் சில நட்சத்திரங்களின்
மரண அறிவித்தலை வாசித்துக் கொண்டிருந்தன
உன் அழகை கண்ட அதிர்ச்சியில்
அவற்றுக்கு "ஹாட் எட்டேக்காம்".

ஒளி வீசும் வண்ண நிலவு கூட
தனக்கான கல்லறையை விண்மீன்களை ஏவி
விரைவாக கட்டிக் கொண்டிருந்தது
அடுத்த இலக்கு நான்தான் என்று.

சுட்டெரிக்கும் சூரியனோ ஏனைய கிரகங்களுடன்
பேச்சு வார்த்தை நடாத்திக் கொண்டிருந்தது
உன்னைக் கைது செய்தால்
எங்கே சிறை வைப்பதென்று.

கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த (கலேவெல)

# இரவச்சம்

## அதிகாரம் : 107

உள்ளதை ஒளிக்காது
உவப்புடன் ஈவோரிடத்துங்கூட.
இரவாமல் வறுமைதாங்குதல்
கோடிநன்மை தருமாம்.

இறைவன் சிலரை
இரந்துவாழவே விதித்திருந்தானெனில்.
அவனே இரப்பவன்போல்
அலைந்துதிரிந்து கெடவேண்டும்.

வறுமையை முயன்றுநீக்காது
இரந்துதான் நீக்கக்கடவோமென.
கருதும் கொடுமைபோல்
கொடுமை வேறில்லையாம்.

நுகர்பொருளில்லாது வறுமைப்படினும்
பிறர்பால்சென்று இரவாசால்பு.
உலகெல்லாம் சேர்ந்தாலும்
ஈடாகா பெருமைக்குரியதே.

நெறியொடு உழைத்ததால்
கிடைத்த புல்லரிசிக்கூழேயாயினும்.
அஃதுண்பதைக் காட்டிலும்
இனிமை வேறொன்றில்லையாம்.

தண்ணீரின்றி தாகத்தால்
சாகும்பசுவிற்கும் நீர்வேண்டி.
இரத்தலைவிட நாவிற்கிழிந்த
செயல் வேறில்லையாம்.

இரப்போர்க்குத் தம்பொருள்
ஒளிப்போரிடத்து இரத்தலை.
தவிர்த்திடுங்களென்று இரப்போரெல்லோரிடத்தும்
இரந்துவேண்டுகின்றேன் யான்.

வறுமைக்கடல்கடக்க மேற்கொண்ட
இரத்தலெனும் காவலற்றமரக்கலம்.
ஒளித்துவைக்கும் பாறைதாக்க
உடைந்து நொறுங்கிபோம்.

இரந்துநிற்கும் கொடுமையும்
அவர்க்கில்லையென ஒளிக்கும்.
இருப்போரையும் காணுமுள்ளம்
கரைந்து அழிந்துபோம்.

இருப்போர் இல்லையெனும்போது
இரப்போருள்ளம் உடைகிறதே!
ஒளிப்போருயிர் வாழ்ந்தால்
அஃதெங்கே புகுந்தொழிந்துபோமோ?




கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# போன்சாய் மரத்தில் பூத்த காலம்



அனுபவங்களின் வளர்ச்சியில்
ஆளுமையானபின்னே
முதுமையின் தடத்தில் முயற்சிக்கும்
பெரியோரின் பாதைக்குள்
எட்டுவைக்கக்கூட நினைப்பில்லாது
கையில் அலைபேசியுடன் சுற்றுகிறது
இளமையின் துள்ளல்.
சகிப்பற்றும் சலிப்புற்றும் தனக்குள் தானே
பொறுமையைத் துறந்தும்
முணுமுணுத்துத் திரியும் எரிச்சல் மனதில்
விதைகளைத் தூவிட நீளும் கரங்களை
நேசிப்பதில்லை உலகின் ஓட்டம்.
கூட்டுத் தனத்தில் கோபமும் வெறுப்பும்
இளைப்பாறிக்கொள்ள மனங்கள் ஏந்தின.
யாருமற்ற தனிமையில்
வீடெங்கும் வெறுமையைக் காணும்
போன்சாய் மரமென பூக்கிறது
ஒற்றைப் பிள்ளையின் ஓயாக் கனவுகள்.
நடை வண்டி ஓட்டாது நாலு சக்கர வாகனப் பயணம்
தடை கண்டால் தாண்டாது தவித்திடும் தருணம்
இடையூறுகளுக்குள் ஏற்றுக்கொள்ளாத பக்குவமென
சோலைகளில் பூக்காத மரங்களைப் போல
இல்லமெங்கும் போன்சாய் மரமெனப் பூத்திடும் காலத்தில்
அவரவர் பயணத்தில் அவரவரே ஆண்டவராகலாம்.

கவிஞர் இளையவன் சிவா

# பெயர்த்தி

அவள் சென்ற பின்
அவள் அமர்ந்த இருக்கையை
அனிச்சையாகத் துழாவியது
என் கரங்கள்.

சித்திரம் வரையும்
பேனா ஒன்று கையில் அகப்பட;
பிஞ்சுக் கரத்தில்
ஏந்தி அவள் வரையும் காட்சி
கண்ணில் விரிய;



அவள் இருப்பதைத் தேடியது
என் நெஞ்சம்.
'பாட்டி! எனக்கு இரவு சாப்பாட்டுக்கு
ஒரே ஒரு தோசையும்
மொளகாப் பொடியும்
வெல்லமும் மட்டும்'

பக்கத்தில் ஒலித்தாற்போல் இருக்க;

நாளையும் இருந்து
போயிருக்கலாம்!
அதை நான் சொல்லியிருக்கலாம் தான்!

வாய் திறந்து சொல்ல
மனம் ஏனோ தடுக்க;
எனக்கு ஏனோ ஒரு தயக்கம்!
அவரவர்க்கு எத்தனையோ அலுவல்!
அவரவர் வாழ்வில் எத்தனையோ சிக்கல்!
அவரவர் வேகத்தின் போக்கில்,
நான் ஏன் ஊடே!

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# மகிழ்வித்து மகிழ்

ஏழையின் வயிற்றை ஒருவேளை நிரப்பிடு
எளியோருக்கு முடிந்த உதவியை செய்திடு
மழலையின் மனதாய் என்றும் வாழ்ந்திடு
புன்னகை மலராய் பூந்தோட்டத்தை உருவாக்கிடு



மகிழ்ச்சி என்றுமே மனதின் பேரானந்தமே
மாற்ற முடியா காயங்களும் மாறிடுமே
முகத்தை மாற்றி சமூகத்தையும் மாற்றிடுமே
சிந்திய ரத்தமும் சிந்திக்க செய்யுமே

எதுவும் நிலையில்லா உலகின் ஆயுதமே
ஒடிந்த மரத்திலும் துளிர்விடும் நம்பிக்கையே
நீடித்த வாழ்வின் அதிசய மருந்தே
நானென்று இல்லாமல் நமக்கென்று நினைப்போமே

ஓடுகின்ற காலமும் மறையாத புன்னகையும்
எல்லோர் இதயத்திலும் பதிப்போம் கடவுளாய்
இறைவன் வாழ்வது மழலையின் சிரிப்பில்
உருவாக்கிடுவோம் உள்ளத்தால் எல்லோர் இதயத்திலும்

புன்னகையை மந்திரம் ஏந்திய புன்னகைவாதியாய்
பூக்களின் வாசம் போல் புத்துணர்ச்சியூட்டுமே
கனவுகள் சுமந்திடும் இதயம் சிரிக்குதே
காற்றாய் வந்தது காலத்தையும் கடக்குதே

புன்னகையாய் பூத்திருப்போம்
எல்லோரையும் சிரிக்க வைத்திருப்போம்

கவிஞர் இரா. மகாகிருஷ்ணன், மயிலாடுதுறை

# சித்திரை நிலவாய்ச் சிந்தை கவர்ந்தவளே

கண்களில் செய்த
காயங்களைக் கொண்டு
சித்திரை நிலவாய்ச்
சிந்தை கவர்ந்தவளே

ஊதக்காத்து வீசையிலே
ஊருசனம் தூங்கிருச்சு
தங்கமே உன்நெனப்புல
தவிச்சுக் கெடக்கிறேன்

தட்டுமுட்டுச் சாமான்களை
வீதியில இறைச்சதுபோல
உன்னோட சேர்த்துவச்சு
ஊரெல்லாம் ஓமளிப்பு

தட்டுகெட்ட சிறுக்கிய
தடம்மாறிப் போயிட்ட
வீட்டுக்குள்ள இருக்கிறப்பத்தான்
வெண்கலம் விலைபோகும்

வீதிக்கு வந்தபின்னால
நாதியத்துப்போச்சு என்னோடபேச்சு!
தங்கவெளயிற பூமியிப்ப
தரிசக்காடாப் போயிருச்சு



தன்னாலபேசி தனியாசிரிச்சு
வக்கத்துப்போனவன வருமதின்னுருச்சு
திக்குதிசை தெரிஞ்ச
பெரியவீட்டு முதலையோட

கல்யாணம் பண்ணி
பவுசா வாழுற
உன்னநெனச்ச பாவத்துக்கு
நெஞ்சுல அரளிவச்சு

நெதமும் பாத்துச்
சிரிக்கிற சீமாட்டி!
காலம்கடந்து போச்சு
வெறும்கவிதையா நானியிருக்கேன்!

கவிஞர் யாழிசைச்செல்வா, தேனீ மாவட்டம்

# களவாடிய காலம்



தேடிய கண்களில்
பொய் இல்லை
உமிழ்ந்த மொழியில்
மட்டும் மெய்யில்லை

வாயிற் கதவின் வழி
காத்திருந்த பார்வையில்
வாசலில் கண்டநிழல்
காணவியலா முரண்

உருளும் கருவிழியில்
உவமை பேசும் சிலேடை மனம்

கருமையில் கலந்த கண்களுக்கு
சிறுதுளி ஒளியும் களவாடி கொல்லும்

இருந்தவரை இருந்தெல்லாம்
நிலைக்குமோ இறுதிவரை

எரிமேடை மேல் கிடந்த உடல்போன்று
நகருது பொழுதுகளில் தயக்கம்

கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# குருவும் சீடனும்

சீடன்:
*********

ஓயாத பிணியாலே ஓய்ந்திட இயலேன்
தேயாத துன்பத்தாலே துளியும் மகிழ்ந்திலேன்
மாயாத வினையாலே மயக்கம் தெளிந்திலேன்
ஈயாத மனதாலே ஈகையை அறிந்திலேன்

குரு:
******

ஈந்திடும் மனமாக்கு ஈகை அறிவாய்
தூர்ந்திடும் வினை மயக்கம் தெளிவாய்
கரைந்திடும்  துன்பம் கணமும் மகிழ்வாய்
தீர்ந்திடும் பிணி தன்னிறைவு பெறுவாய்



கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# உறவுக்கு கை கொடுப்போம்

ஒற்றுமையாய் வாழும் வாழ்வு
இனிமை கலந்த பெருவாழ்வு.

இணைந்த கைகள் என்றுமே
இரும்பு கரமாய் மாறுமே
பகை விலக்கி நட்பு போற்றும்
பண்பு என்றும் வேண்டுமே.



அன்பு வழி என்றுமே
உயர்வுக்கது சாத்தியமே
ஒன்றுபட்டு வாழ்வதாலே
நன்மை பயக்கும் வாழ்விலே.

உரிமைக்கு குரல் கொடுத்து
*உறவுக்கு கை கொடுத்து*
உண்மை அன்பின் மேன்மையோடு
கூட்டுறவாய் வாழ்வதிலே
நாட்டுக்கும் நலனே
வீட்டுக்கும் பயனே.

பகிர்ந்து உண்ணும் எண்ணமும்
அன்பை விதைத்து அன்பை பெறும்
அற்புத உலகமாய்
மாற்றும் சக்தி நம்மிடமே.

ஒற்றுமையின் மூலமே
இதய அன்பு கூடிட்டால்
இனிய வாழ்வு மலருமே

கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# சன்னல் நிலவு

எங்கு சென்றாலும் பின்தொடரும்
சற்று நின்றால் நின்றுபோகும்
என் மீதுக் காதலோ?
இது என்ன புதுக்கதை?



எட்டிப் பார்க்காத உறவுகள்
முட்டிக் கொள்ளும் நட்புகள்
நெட்டித் தள்ளும் அருகினர்
பொட்டுநிலா கதவு இடுக்கிலும்
சுட்டியாய்ச் சிரிக்குது
சன்னல் நிலா!

விட்டத்துக் கூரையின்
ஓட்டையில் எல்லாம்.
குட்டிக் குட்டியாய் சின்ன நிலாக்கள்.
மட்டிலா மகிழ்ச்சியில்
கெட்டியாய் பிடிக்க.
தொட்டுவிட முடியலையே.
தட்டுத் தடுமாறிப் போனேன்!

வீட்டு வாசலிலே
தொட்டத் தண்ணீரில்
நட்டநடு மையத்தில்
வட்டநிலா வந்திருக்க.
தொட்டுத்தான் பார்த்தேன்.
ஒட்டாமலே ஒடிந்தது!

தோற்றுப் போனேன்
நிலாப் பெண் காதலில் மட்டுமல்ல.
நிலாக் காதலிலும் தான்!

கவிஞர் நுதல்விழி

# நமது நிழல்கள்

எனது நிழல் மீது உனது நிழல்
எதார்த்தமாய் பட்டதும்
நிஜமான நானும்
எனது நினைவுகளை இழந்து
நிழலானேன்
எனது நிழலும்
நினைவுகள் பெற்று
நிஜமானது



கவிஞர் புன்னகை தூரன் இரா. சங்கர், ஈரோடு

அதன்
இயல்போடு
நம்மை
சாதாரணமாகத்தான்
கடக்கிறது
புயல்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# தூறலென பெண்ணவள்

மெல்லிசை நிறைந்த அதிகாலையில்
இலை கிளையில் வடியும்
மாரியின் வருகை
மெய் உரச சிலிர்த்த அங்கத்தில்
புல்லரிக்க.

வான் பார்த்த வதனத்தில்
ஒரே புள்ளியில் முடித்திடாது
தொடரும் புள்ளிகளில்
இதழ் விரித்து நகைக்க.
நா சுவைத்ததோ மாரியதனை.



நிமிடத்திற்க்கு நூறு முறை
சிமிட்டிடும் விழியின் இமை
மழைத்துளியால் நிறைய
சலனமற்ற அகம் அப்பட்டமாம்.

மழலையாய் மாறி
மாரியில் ஜனனிக்கும்
யுவதி அவளோ
மழையதன் மகளோ!

புன்னகையில் பூரித்தவள்
ஆசையாய் மாரியுடன் கதைக்க
மாடலிங் பெண்ணவளும் அல்ல.
கிராமிய குழவியும் அல்ல.

இரண்டும் கலந்த இன்னிசையாய்
துள்ளும் மான் போல
பாதம்படும் நிலத்தில் பறவையாய்.

சாரலில் கலந்த தூறல் அவள்.

கவிஞர் சு. கார்த்திகா, பழநி

# என் தனிமையே

என் இனிய தனிமையே
மனம் விரும்புதே உனை

சில நேரங்களில்
நீண்ட நேர தனிமையில்
மனம் வெறுக்குதே உனை

பல வேலைகளில் உன் மடியில்
மனம் உறங்க நினைக்கிறது

தனிமையே சிதறலாய்
அழுத்தத்தின் உச்சத்தில்

தடுமாறும் மனமோ
தனிமையை தவிர்க்கிறது



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# நம்பிக்கை

கடலும் காலடிதான்
தூரமும் அருகில்தான்
ஆகாயமும் கரங்களில்தான்
எதையும் வென்றிடலாம்
நம்பிக்கையும் தைரியமும்
நம்மிடம் இருந்தாலே



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# மனதின் பாரங்கள்

பாரங்களை மனதில் சுமந்து கொண்டு
வாரங்கள் மெதுவாய் நகர்கின்றன.
சுமைகளை இறக்கி வைக்க முடியாமல்
இமைகள் மூட மறுக்கின்றன.

அலைமோதும் கடலளவு சோகங்களால்
நிலைதடுமாறி மீளத் துடிக்கிறேன்.
உறவுகளின் இழப்பில் மௌனித்த மனதால்
இரவுகளின் உறக்கத்தை மறந்தேன்

நினைவுகள் கசந்து போனதால் இன்று
கனவுகளும் வெறுமையாகிப் போனது
உணர்வுகள் உயிரோடு கொல்லப்பட்டால்
தளர்வுகளை நடையிலும் உணர்கிறேன்.



பாசத்தை எல்லை தாண்டிப் பொழிந்தால்
நேசத்தை இழந்து தவிக்கிறேன்.
நடிக்கத் தெரியாத நான் இன்று
படித்துக் கொண்ட பாடங்கள் ஏராளம்

விழிகள் குருடாகி பாதை மாறியதால்
வழிகள் யாவும் சூன்யமாகிப் போனது
ஆண்டுகள் கடந்து சென்ற போதும்
மீண்டு வர முடியாமல் மாள்கிறேன்.

புதிய பாதை வெகுதூரம் விரிகிறது
கதியை மாற்ற முயல்கிறேன்
விதியை மாற்றி எழுத முடியாதா
மதியை இழந்து தவிக்கிறேன்.

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷா, கம்பளை

# நல்வாழ்வு தந்தாயே நீயே

மௌனமாய் நுழைந்து
மனசுக்குள் வந்தாய்
பௌர்ணமி நிலவுப்
பெண் நீதானே

உணர்வோடு ஒன்றி
உதிரத்தில் கலந்தாய்
தினமும் தின்னும்
திராட்சையாகிப் போனாய்

கனவு லோகத்து
காந்தக் கன்னியே
உனக்குள் நானும்
உயிராகிப் போனேன்



வரமாய் கிடைத்த
வடிவான வசந்தமே
தேராக வலம்வரும்
தேவதை எனக்கு

வாழ்வின் இன்பதுன்பம்
உரைத்தாய்
தாழ்வில்லா வாழ்க்கையை
தரமாய்க் கொடுத்தாய்

பிரியாது பிணைந்த
பிரிய சகியே
நல்வாழ்வு எப்போதும்
தந்தாயே நீயே

கவிஞர் தமிழ்நதி கிருஷ்அபி, இலங்கை

# நடிப்பு கலைந்தால் கசங்கும் மனமே

எப்படித்தான் இப்படியெல்லாம்
சொல்லமுடிந்தது என்ற கேள்வியையே
மனம் கேட்ட வண்ணமிருக்கிறது.

ஆம் ஆக மனதினுள் இப்படியெல்லாம்
எண்ணியபடி போலியாய்
நாடகநடமாட்டம் கொண்டிருக்க வேண்டும்
இத்தனை நாட்களுமென்று தான்
மனம் சொல்கிறது.

இல்லையா பின்ன
இத்தனை நாட்களும்
நல்லதாய் புரிந்தவராய்
பேசிக்கொண்டிருந்தவர்
திடிரென பழிச்சொல் சாடி
இருக்க வேண்டாமே.

பழிச்சொல்லை சுமந்துக்கொண்ட மனதோடு
தானே பேசிக்கொண்ட நாட்களை
நகர்த்திருக்க வேண்டும்

அதனாலே தானே சுமக்க முடியாமல்
வீசிவிட்டார்கள்
வார்த்தைகளாக திரட்டி.

மின்னலோடு பின் வரும் இடியாய்
கடிக்கிறது நெஞ்சோரம் பெறும் வலி.

இறந்தே விட்டேன்
மறந்தே விடமாட்டேன்
என்றும்.

உறுதிகள் நெஞ்சினுள் தினமும்
மனமும் கசந்து சுருங்கி வலியை தருகிறது ..

நேசப்பிழையில்
வேசம் களைந்தது விட்டதில்
மகிழ்வு கொள் மனமே
தேற்றவேண்டும் நானே.



கவிஞர் சீஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (புத்தளம்)

# துளிப்பாக்கள்

(1) காய்ந்த இலைகள்
அதிக கவனத்தை ஈர்க்கின்றன
சிறுவர் சித்திரங்கள்

(2) மரக் கிளைகள்
மகிழ்ச்சியோடு பாடுகின்றன
பழமுண்ணும் பறவைகள்

(3) இரேகைச் சித்திரம்
கண்ணீரை வர வைக்கிறது
முதியவரின் முகம்

(4) சிறிய மேளம்
பெரும் இசை தருகிறது
அடிபட்ட குழந்தை

(5) பாறை வெடிப்பு
நீர் தேடி அலைகிறது
பருமர வேர்



கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், வெல்லபதியான், (இலங்கை)

# மாலைப் பொழுதில்!

அந்திமஞ்சள் நிறத்தாலே அழகுமிகும் வானம்!
எந்திரமாய் உழைத்தவர்கள் இளைப்பாறும் காலம்!
மணம் பரப்பும் மலர்கள்பல மலர்கின்ற நேரம்!
தினம்தோறும் சந்திக்கும் இடம்தேடிக் காதலர்கள்
மனமயங்கி மடிதனிலே சாய்ந்திருக்கும் காலம்!
இணைதேடிக் குயிலினங்கள் இசைபாடும் நேரம்!
பள்ளிச் சிறுவர்கள் துள்ளிவரும் நேரம்!
புள்ளினங்கள் கூட்டிற்குத் திரும்பிடுமே நாளும்!
ஆதவனின் மறைவாலே இருள்சூழும் நேரம்!
திங்களின் வரவாலே ஒளிவெள்ளம் பாயும்!
இல்லம் திரும்பி எல்லையிலா மகிழ்வுடனே
எல்லோரும் களித்திடுவர் பொன்மாலைப் பொழுதினிலே !



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி


# அந்த தொ(ல்)லை பேசி

மிருதுவாக
வருடும் போது
காட்சிகளை மாற்றுகிறது
கைபேசி.

பல
முப்பது வினாடி
காட்களே முடக்குகின்றன
மனித மூளையை.

எப்படியோ
ஒரு நாளின்
பெரும்பகுதியை
எடுத்தே விடுகிறது
இந்த தொ(ல்)லைபேசி.

தேர்வு
அவ்வளவு
நெருங்கிய பின்னும்
விலக மறுக்கிறது என்
அலைப்பேசி




கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# இங்கே

அருகில் இருப்பதாலேயே
திறமையும் உழைப்பும்
கண்டுகொள்ள படாமை

எளிதாக கிடைப்பதால்
பெறுவதற்கு
முக்கியம் கொடுக்காமை



பிறரால் பாராட்டினாலும்
நெருக்கமானவர்கள்
அங்கீகாரம் கொடுக்காமை

கேட்காமாலே
முகம் பார்த்து
தானாக முன்வந்து
செய்யும் உதவிகள்
மதிக்கப்படாமை

எப்பாவது நடக்கும்
சிறு தவறுதான்
எல்லோருக்கும்
வருவதுதான் என
பிறரால் சொல்லப்பட்டாலும்

அருகில் இருப்பவர்கள்
அதுபற்றி வாசிக்கும்
மிகநீண்ட குற்றப்பத்திரிகை
இங்கே அதிகம்.

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

மடிக்கணினியை வருட கணக்கில் மடியிலேந்தி
ஆண் மகன் பிரசவித்தான்
மலட்டு தன்மையை
***

நோய்களை விடுவித்து
ஆரோக்கியத்திற்கு கடுங்காவல் தீர்ப்பளித்தார்
நீதிபதி ஆண்ட்ராய்டு பி ஏ பி எல்
***

பவுடர் டப்பா
மூடாமல் இருக்கும் வீட்டில்
குழந்தைகள் இருக்காது
***

எனக்கு
தூங்கினால் மட்டுமே
நேரம் போவது தெரியாது
***

நான்
தூங்குவதில் உள்ள தொல்லை
நீ எனக்குள் விழித்திருப்பது
***

உடம்பில்
அழுக்கு சுலபமாக சேருமிடம்
மனம்
***

பிடிவாததிற்கு தலை சாய்க்காதீர்கள்
எதிர்காலத்தில்
தற்கொலை வரை இட்டு செல்லும் அது
***

பள்ளி படிப்பின் போது
எனக்கு புத்தகத்தை விட
குச்சி டப்பா என்றால் உயிர்
***



கல்வி சரியில்லை என்றால் கூட
சரி போகட்டும்
கழிப்பறை சரியில்லா பள்ளிகள்
கண்டிப்பாக மூடப்பட வேண்டியவை
***

இளைஞர்கள் பெயரின் பின்னால்
சாதி இருக்கும் வரை
வல்லரசென்பது வாரா

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்



வசாய்ரோடு பங்களாவில் ஜே.கே மிகுந்த களைப்போடு வீட்டிற்கு வந்து கோட்டைக் கழற்றிய போது அழுகை சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்.

ராணி மூக்கைச் சீந்தி அழுதுகொண்டிருந்தாள். ஜே.கே.வுக்கு கோபமும் எரிச்சலும் வந்தது. மெதுவாக படுக்கை அருகே வந்து அவளை ஆதரவாகத் தொட்டார்.

ராணி கோபத்தில் எழும்பிவிட "கொஞ்சம் உன் அழுகையை நிறுத்துகிறாயா? எதற்காக இந்தச் சொத்து.. எதற்காக இந்த அலைச்சல் எல்லாவற்றையும் உதறி விட்டு நேரே இமயமலை அடிவாரத்திற்கு போய் சாமியாரிடம் சரணடைந்து விடவா…இல்லை… எல்லாவற்றையும் இல்லாதவர்களுக்கு அள்ளி வீசி விட்டு காலையிலே இருந்து "அம்மா… தாயி..சோறு போடுங்கள் என்று பிச்சை எடுக்கவா…?"

"அம்மாவும் பிள்ளையும் சேர்ந்து ஏன் இப்படி என்னை அலைக்கழிக்கிறீர்கள்?"

"உனக்குக் கூடத் தெரியும் ராணி. ஒரே நேரம் சாப்பிட்டு விட்டு மற்ற இரண்டு வேளை பட்டினி கிடந்தது. இதே அரசு பிறப்பதற்கு ஆஸ்பத்திரிகுப் போக பணமில்லாமல் யார் காலையெல்லாமோ பிடித்துக் கெஞ்சியது மறந்து போனதா?"

"அவன் என்னடாவென்றால் தன் காலிலேயே நிற்கப்போகிறேன் என்று வீட்டை விட்டுக் கிளம்பி விட்டான். நீ அவனை நினைத்து அழுது கொண்டிருக்கிறாய். நான் எதை நினைத்து அழ… எதை எடுத்தெறிந்து கோபப்பட.."

"ராணி நாம்பட்ட கஷடம் நம் ஒரே மகனும் படக்கூடாது என்பதற்காகத்தானே இந்த வேகமான ஓட்டமும் சம்பாத்தியமும். நான்

நிறுத்தி விடத் தயார். அவனைப் போய் கூட்டிக்கொண்டு வருகிறாயா?"

"நீயாவது என்னைப் புரிந்து கொள்வாய் என்று நினைத்தால்.. நான் களைப்படைந்து வரும்போது நீ அழுது கொண்டிருந்தால் எனக்கு இன்னும் எவ்வளவு கஷ்டமாக இருக்கும்."

"நேற்றுத்தானே சொன்னேன். அதற்குள்ளே திரும்பவும் உன்னிடம் வேதாளம் முருங்கை மரம் ஏறிவிட்டதே."
"அவன் நேற்று முழுவதும் தாராவி, சுன்னப்பட்டி, சயான், நெரூல், பகுதியெல்லாம் சுற்றி விட்டு காந்திவிலி, பொய்சருக்குப் போயிருக்கிறான்."

"அவனைப் பற்றி ஒவ்வொரு நிமிடமும் செய்தி சொல்ல ஆள் இருக்கிறதென்று சொன்ன பிறகும், சின்னப்பிள்ளை மாதிரி இருந்து அழுதுகொண்டியுக்கிறாய்."

"அவன் அலையட்டும்... கொஞ்சம் விட்டுப் பிடிப்போம். அவனுக்குப் பணம் தர மறுத்து வீட்டிற்குத் திரும்பச்சொல்லி அறிவுரை சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா?"



தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன்

# 'ஆய்வியல் அறிஞர்' பேரா அ.ச. ஞானசம்பந்தன்

கட்டுரை

## பிறப்பு, கல்வி



அ.ச. ஞானசம்பந்தன் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கல்லணைக்கருகில் உள்ள அரசன்குடி என்ற ஊரில் புகழ்பெற்ற தமிழறிஞரான அ.மு. சரவண முதலியார் மற்றும் சிவகாமி இணையருக்கு 1916-ல் பிறந்தார். அ.ச. ஞானசம்பந்தன் தந்தையிடம் தொடக்க கல்வியை பெற்றார். பின்னர் லால்குடி போர்டு உயர்நிலைப் பள்ளியில் உயர்நிலைக் கல்வி முடித்து 1935-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இயற்பியல் பாடத்தில் இண்டர்மீடியட் படித்தார். அண்ணாமலைப் பல்கலையில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த நாவலர் சோமசுந்தர பாரதியார் அவரது தமிழ் அறிவை அடையாளம் கண்டு அவரை இயற்பியலில் இருந்து

தமிழுக்கு மாறும்படி செய்தார். அக்கல்லூரியில் படிக்கும் போது வி.எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரி , திரு.வி. கல்யாணசுந்தர முதலியார், ரா. ராகவையங்கார் ,தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் போன்ற தமிழ் அறிஞர்களின் தொடர்பு கிடைத்தது. அண்ணாமலை பல்கலையில் தமிழில் இளங்கலையும் முதுகலையும் பயின்றார்.

## தனிவாழ்க்கை

அ.ச. ஞானசம்பந்தன் 1940-ல் தன்னுடன் படித்த ராஜம்மாளை காதலித்து பலவகை எதிர்ப்புகளின் நடுவே சென்னையில் டாக்டர் தர்மாம்பாள் தலைமையில் நடந்த விழாவில் மணந்துகொண்டார். அவர்களுக்கு மெய்கண்டான், சரவணன் என இரு மகன்களும் சிவகாமசுந்தரி, பங்கயச்செல்வி, அன்புச்செல்வி, மீரா என மூன்று மகள்களும் உள்ளனர்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

## கல்விப்பணி

1942- 1956 பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர் ராக வேலையில் சேர்ந்தார்.
1957-1958 சென்னை அகில இந்திய வானொலியில் நாடகத் தயாரிப்பாளர்
1959 முதல் தமிழ்நாடு அரசின் செய்தித்துறையின் மொழிபெயர்ப்புத்துறை இணை இயக்குநர்
1967 முதல் 1970 வரை தமிழ்வளர்ச்சித்துறை இயக்குநர்
1971-ல் மதுரை பல்கலை தமிழ்த்துறை தலைவராக பணியில் சேர்ந்தார். 1973-ல் ஓய்வுபெற்றார்.

## ஆன்மீகம்

அ.ச. ஞானசம்பந்தன் உறுதியான சைவ மதச்சார்பு கொண்டவர். இறுதிக்காலத்தில் தமிழ்மெய்யியல் சார்ந்த சைவமரபு ஒன்றை தன் திருப்புகழ் உரை வழியாக முன்வைத்தார்.

## இலக்கிய வாழ்க்கை

சிதம்பரம் அண்ணாமலை பல்கலையில் படிக்கையில் திரு.வி. கல்யாணசுந்தர முதலியார் அ.ச. ஞானசம்பந்தனுக்கு தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரை அறிமுகம் செய்துவைத்தார். தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரை தன் ஆசிரியராக ஏற்றுக்கொண்டார் அ.ச. ஞானசம்பந்தன்.

அ.ச. ஞானசம்பந்தனின் பெரியபுராண ஆய்வுகள் சைவசித்தாந்த மரபின் முக்கியமான அறிவுத்தொகையாக கருதப்படுகின்றன. சைவநாயன்மார்களின் வரலாறாக மட்டுமன்றி, அந்நூலை சைவசமயத்தின் வரலாறு, சைவமரபுகள், வழிபாட்டுமுறைகள் ஆகியவற்றை பற்றிய விரிவான ஆய்வாக அமைத்திருக்கிறார்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

### திருவாசகம் உரை

திருவாசகத்திற்கு இரண்டாயிரம் பக்கங்களில் எழுதிய உரை அ.ச. ஞானசம்பந்தன் நூல்களில் மிகப்பெரியது. பார்வை மறைந்தபின் உதவியாளரிடம் சொல்லி எழுதப்பட்டது இது. அ.ச. ஞானசம்பந்தன் தன் திருவாசக உரையில் பக்தி இயக்கத்திலும், சைவ மரபிலும் தமிழ்ப் பண்பாட்டுக்கு மட்டுமான தனித்தன்மைகள் என்ன என்றும், தமிழர் மெய்யியல் என்ன என்றும் விரிவாக ஆராய்கிறார்.

### விருதுகள்

- ராஜா சர் அண்ணாமலை செட்டியார் விருது
- திரு.வி.க விருது
- கலைமாமணி விருது
- தருமபுர ஆதீன வித்வான் விருது
- கபிலர் விருது
- சாகித்திய அகாதமி விருது - 1985 (கம்பன் புதிய பார்வை)
- சங்கப்பலகை குறள் பீடம் விருது - தமிழக அரசு விருது - 2001

### நூல்கள்

அ.ச. ஞானசம்பந்தனின் எல்லா நூல்களும் 2007-ல் நாட்டுடைமையாக்கப்பட்டு இணைய நூலகத்தில் கிடைக்கின்றன

- அ.ச.ஞா.பதில்கள்
- அகமும் புறமும்
- அரசியர் மூவர்
- அருளாளர்கள்
- அனைத்துலக மனிதனை நோக்கி (தாகூர் கட்டுரைகள்)
- இராமன் பன்முக நோக்கில்
- இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும் - 1945
- இலக்கியக்கலை - 1964
- இளங்கோ அடிகள் சமயம் எது?
- இன்றும் இனியும்
- இன்னமுதம்

திரு அ. வில்சன், இதழாசிரியர்

### நூல்கள்

- கம்பன் எடுத்த முத்துக்கள்
- கம்பன் கலை - 1961
- கம்பன் நோக்கில் நாடும் மன்னனும்
- கம்பன் புதிய பார்வை - 1985
- குறள் கண்ட வாழ்வு
- சேக்கிழார் தந்த செல்வம்
- தத்துவமும் பக்தியும் - 1974
- தம்பியர் இருவர் - 1961
- தமிழ் நாடக வரலாறும், சங்கரதாச சுவாமிகளும்
- திரு.வி.க
- திருவாசகம் சில சிந்தனைகள் பகுதி-1
- திருவாசகம் சில சிந்தனைகள் பகுதி-2
- திருவாசகம் சில சிந்தனைகள் பகுதி-3
- திருவாசகம் சில சிந்தனைகள் பகுதி-4
- திருவாசகம் சில சிந்தனைகள் பகுதி-5
- தேசிய இலக்கியம்
- தொட்டனைத்தூறும் மணற்கேணி
- தொரோ (Thoreau) வாழ்க்கை வரலாறு
- நான் கண்ட பெரியவர்கள்
- பதினெண் புராணங்கள்
- பாரதியும் பாரதிதாசனும்
- புதிய கோணம்
- பெரிய புராணம் ஓர் ஆய்வு-தொகுதி-1
- பெரிய புராணம் ஓர் ஆய்வு-தொகுதி-2
- மகளிர் வளர்த்த தமிழ்
- மந்திரங்கள் என்றால் என்ன?
- மாணிக்கவாசகர் - 1974
- முற்றுறாச் சிந்தனைகள்

### மறைவு

அ.ச. ஞானசம்பந்தன் இறுதிக்காலத்தில் நீரிழிவு நோயால் கண்பார்வை பாதிக்கப்பட்டு படிப்படியாக முழுமையாகவே பார்வையை இழந்தார். உதவியாளரை கொண்டு எழுதச்செய்து தன் நூல்களை எழுதினார். அ.ச. ஞானசம்பந்தன் ஆகஸ்ட் 7, 2002-ல் மறைந்தார்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

# நாளை நமதே

## வெற்றியை விட
## சில சமயங்களில்
## முயற்சிகள் மிகவும்
## அழகானவை

அகமும் தமிழே

முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa  www.aagaramuthala.com  aagaramuthala@gmail.com